

"வாக்கிய பஞ்சாங்கம்தான் அனுபவ ரீதியாக பலனுக்கும் ஏற்றதாகவும், சரியானதாகவும் இருக்கின்றது" என்கிறார் பேராசிரியர் பால ஜோசியர் சுவாமி. "திருக்கணிதம்தான் துல்லியமானது" என்று வாதிடுகின்றார் கே.வி.பாலு சரவண சர்மா.



**பால ஜோசியர் சுவாமி:**

ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு மாநிலத்திலும் ஒருவிதமான ஜோதிட முறைகள், நம்பிக்கைகள்

# வாக்கியமா

இருப்பது வழக்கம். ஆனால் நம் நாட்டைப் பொறுத்த வரை, காலம் காலமாக பலரும் விரும்பி கடைபிடிப்பதும், நடைமுறைப்படுத்தப்படுவது வாக்கிய பஞ்சாங்க முறையைத்தான். இந்த ஜோதிட முறையிலான பலன்களை பலரும் அனுபவப் பூர்வமாக உணர்ந்து சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பூமியின் சாய்மானத்திற்கேற்ப, இந்த ஜோதிட முறையே துல்லியமானதாக விளங்குகின்றது. புகழ் பெற்ற யாழ்ப்பாணம் ரகுநாத ஐயர் பஞ்சாங்கம், பாம்பு பஞ்சாங்கம் ஆகியவை இந்த கணித அடிப்படையில்தான் தயாரிக்கப் படுகின்றன.

இன்னும் சொல்லப்போனால் திருமலை திருப்பதியில், ஏழுமலையான் வெங்கடாஜலபதிக்குரிய பூஜை அனுஷ்டானங்கள் யாவும் வாக்கியத்தின் அடிப்படையிலானவை. அவ்வளவு ஏன், ஜோதிட சாஸ்திரத்தில் மிகப்பெரிய பங்கு வகிப்பது சனிப் பெயர்ச்சிதான். இந்த சனிப் பெயர்ச்சிக்கும், சனீஸ்வரனுக்கும் உரிய ஸ்தலமான திருநள்ளாற்றில் வாக்கிய கணித முறைப்படிதான் சனிப் பெயர்ச்சிக்குரிய பூஜைகள் செய்யப் படுகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை 80 சதவீதத் திற்கு மேல், ஏன் 90 சதவீதம் பேர் வாக்கிய பஞ்சாங்க முறையைத்தான் கருத்தில் கொள்கின்றனர்.



**கே.வி.பாலு சரவண சர்மா:**

கால ஓட்டத்திற்கேற்ப திருத்திக் கொண்ட துல்லியமான ஜோதிட முறைதான் திருக்கணித ஜோதிட முறை. மூதாதையர் எழுதி வைத்தவற்றை சரியா, தவறா என்று எண்ணாமல், கண்ணை மூடிக் கொண்டு, கடைபிடிக்கும் முறை வாக்கிய பஞ்சாங்க முறை. திருக்கணித முறையிலோ, வானில் கிரகங்களின் நிலையை துல்லியமாக ஆய்ந்தறிந்து சொல்வதாகும்.



வாக்கியத்திற்கும், திருக்கணிதத்திற்கும் உள்ள ஒரே வேறுபாடு சனிப் பெயர்ச்சிதான். திருக்கணிதப் படி

# திருக்கணிதமா?

செப்டம்பரில் மிதுனத்திலிருந்து பெயர்ந்த சனி வக்ர கதியாகி தற்போது மிதுனத்தில் இருக்கிறது. இது மே 26-ந் தேதி மீண்டும் கடகத்திற்குள் பிரவேசிக்கிறது. இத்தனை துல்லியமாக வாக்கியத்தில் கணக்குப் போட முடியாது.

ஜோதிடத்திற்காக உருவாக்கப்படும் கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர்கள் யாவும் திருக்கணித முறையை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன. தன் விருப்பமாக வேண்டுமானால் (optional) வாக்கிய கணித முறையை தேர்வு செய்து கொள்ளலாம்.

இன்னும் ஒரு முக்கிய விஷயம், கோவிலுக்குரிய அனுஷ்டான முறைகள் எல்லாம் இடைக் காலத்தில் தோன்றியவை. தொன்று தொட்டு இருந்து வரக் கூடியவைகள் அல்ல. நவக்கிரகங்களின் வழிபாடே 300 ஆண்டுகளுக்குள் ஏற்பட்ட ஒன்றுதான். அதற்குமுன்பு கிரகங்கள், அவற்றின் அதிதேவதைகளின் வழிபாடுதான் உண்டு. சூரியனென்றால், சிவன், சந்திரன் என்றால் பார்வதி, ராகு என்றால் துர்க்கை, கேது என்றால் விநாயகர் என்று இருந்தது. ஒருசில விஷயங்கள் தவிர்த்துப் பார்த்தால், இரண்டு ஜோதிட முறைகளுக்கும் பொதுவான அம்சங்கள் நிறையவே உண்டு. இதில் எது சரி என்பதை அவரவர் அனுபவத்திலேயே முடிவு செய்துகொள்ளலாம்.

— எஸ். கதிரேசன்.



...ப்புறாங்க... குழப்புறாங்க... குழப்புறாங்க... குழப்பு